## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.205/2025.
Prosecution witness for P.W. 2 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. முத்துகிருஷ்ணன்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.02.2026.

Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் போக்குவர்து ஆய்வாளராக பணியில் இருந்து ஓய்வு பெற்று தூத்துக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தூத்துக்குடி புறநகர் கிளையில் போக்குவரத்து ஆய்வாளராக பணியில் இருநத்போது 07.11.2014 அன்று TN 72 N 1524 என்ற பதிவெண் கொண்ட தூத்துக்குடி கிளைக்கு சம்பந்தப்பட்ட பேருந்தை அ.சா.1 தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலி நோக்கி ஓட்டி சென்று கொண்டிருந்தபோது நான் அலுவலகத்தில் பணியில் இருந்தேன். அந்த சமயத்தில் அ.சா.1–ஐ மேற்படி பேருந்தின் ஓட்டுநராகவும், முருகன் என்பவரை நடத்துனராகவும் பணி நியமனம் செய்தேன். கிளை மேலாளர் எனக்கு மேற்படி பேருந்தின் கண்ணாடி உடைக்கப்பட்டதாக தகவல் சொன்னார். மேற்படி இருவருக்கும் நான் பணி நியமனம் செய்ததாக சான்றிதழ் கொடுத்தேன். அந்த சான்று **அ.சா.ஆ 2**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

அரசு பேருந்தை பராமரிக்கவும், குறைபாடுகளை சரி செய்யவும் பணிமனையில் தொழில்நுட்ப பிரிவு தனியாக உள்ளது என்றால் சரிதான். அந்த பிரிவிற்கு உதவி பொறியாளர்தான் தலைவர். அவர்தான் சேத மதிப்பை நிர்ணயம் செய்வார் என்றால் சரிதான். முதல் விசாரணை சங்கதிகளைத்தான் போலீஸ் விசாரணையில் சொன்னேன். போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.24 17:49:16 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.